இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்
செவ்வாய்க்கிழமை 02-04-2024

# தமிழை ஏமாற்றாதீர்!

தமிழ்நாட்டை ஏமாற்றிய மோடி, இப்போது தமிழையே ஏமாற்றப் பார்க்கிறார்!

**'தாய்மொழி தமிழ்மொழியாக இல்லையே என்று வருத்தப்படுகிறேன்' என்று பிரதமர் சொல்லி இருப்பதைப் பார்க்கும்போது புல்லரிக்கிறது. சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு ரூ.1500 கோடி ஒதுக்கும் மோடி, தமிழ் வளர்ச்சிக்கு ரூ.67 கோடிதான் ஒதுக்கி இருக்கிறார். அப்போது எங்கே போனது தமிழ்ப் பாசம்?**

2008ஆம் ஆண்டு நடந்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத் திறப்பு விழாவில் பேசிய கலைஞர் அவர்கள் மகத்தான அறிவிப்பு ஒன்றைச் செய்தார்கள். **"150 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவு, அந்த கனவு நினைவாக வேண்டும் என்று 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் கொண்ட நினைவு. செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் காலூன்றுகின்ற இந்த இனிய நாளில் எனக்கென்று உள்ள சொந்த பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை நிறுவனத்தின் பொறுப்பில் கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை ஒன்றினை நிறுவிட வழங்குகிறேன்"** என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார். **'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் அறக்கட்டளை'** வாயிலாக ஆண்டுதோறும் தகுதி வாய்ந்த தமிழறிஞருக்குக் **'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது'** வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது இந்தியாவிலேயே மிக உயரிய அளவில் ரூ. 10 இலட்சம் பரிசுத் தொகையும், பாராட்டிதழும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உருவம் பொறித்த நினைவுப் பரிசும் அடங்கியதாகும்.

முதல் விருது 2010, சூன் 23 அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் அன்றைய குடியரசுத் தலைவர் அவர்களால் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த 'பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா' அவர்களுக்கு வழங்கப்பட்டது. 2011 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான விருதுகள் வழங்கப்படவே இல்லை. பத்து ஆண்டுகள் அந்த விருதை யாருக்கும் வழங்கவே இல்லை. கழக அரசு பொறுப்பேற்றவுடன் விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 22.01.2022 அன்று நடைபெற்ற விழாவில் பரிசுகள் அளிக்கப்பட்டன. **அப்போதெல்லாம் மோடியின் தமிழ்ப் பாசம் எங்கே போனது?**

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆட்சி மொழிக்கான நாடாளுமன்ற நிலைக்குழு, மொத்தம் 112 பரிந்துரைகள் கொண்ட 11ஆவது அறிக்கையை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறது. ஆட்சி மொழி எனும் பெயரால் முழுக்க முழுக்க இந்தி மொழியை வலிந்து திணிப்பதற்கான பரிந்துரைகளையே இவர்கள் அளித்திருக்கிறார்கள்.

* கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக இந்தி நிச்சயம் இடம் பெற வேண்டும்.

* கல்லூரிகளில் ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியைக் கொண்டு வர வேண்டும்.

* போட்டித் தேர்வுகளில் கட்டாய ஆங்கில மொழி வினாத்தாள் நிறுத்தப்பட வேண்டும்.

* இந்தியில் பணி புரியாத அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் எச்சரிக்கப்பட வேண்டும்.

* ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வில் தேர்வாளர்களின் இந்தி மொழி அறிவை உறுதி செய்ய வேண்டும். இப்படி இந்திய மயமாகவே இருக்கிறது அந்த அறிக்கை. **அப்போது மோடியின் தமிழ்ப் பாசம் எங்கே போனது?**

தமிழ் – ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கை கொண்டதாக தமிழ்நாடு இருக்கிறது. இதில் இந்தியைப் புகுத்தி மும்மொழிக் கொள்கை மாநிலமாக ஆக்கப் பார்க்கிறார்கள். அதற்காகத்தான் புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். புதிய கல்விக் கொள்கையில் முடிந்த இடத்தில் எல்லாம் சமஸ்கிருத மொழியைத் திணிக்கிறார்கள்.

* சமஸ்கிருதம், மும்மொழிப் பாடத்திட்டத்தின் ஒரு மொழியாகப் பள்ளிக் கல்வித் திட்டத்தின் எல்லா நிலைகளிலும், கல்லூரிகளிலும் ஒரு முக்கியமான வளமூட்டக் கூடிய விருப்பப் பாடமாக வழங்கப்படும்.

* மொழிச் சுவையுடனும், அனுபவப் பூர்வமாகவும் மட்டுமல்லாமல் தற்காலத்திற்குப் பொருந்தும் வகையில் சமஸ்கிருத ஞான மரபுகளின் வழியில் முக்கியமாக ஒலிப்பு மற்றும் உச்சரிப்பு முறைகளின் மூலம் கற்பிக்கப்படும். ஆரம்ப மற்றும் இடைநிலை சமஸ்கிருதப் பாடப் புத்தகங்கள் எளிய தரமான சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு, மாணவர்கள் உண்மையிலேயே அனுபவித்துக் கற்கும் வண்ணம் சமஸ்கிருத மொழியின் மூலமே கற்பிக்கப்படும்.

* மத்திய அரசு நடைமுறைப்படுத்தும் மும்மொழிக் கொள்கையில் சமஸ்கிருத மொழி ஒருபாடமாக்கப்பட்டு பள்ளி மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு முக்கிய திறன் வளர்ப்பு விருப்பப் பாடமாக அளிக்கப்படும்.

* சமஸ்கிருத பாடப்புத்தகங்கள் அதிகமாக உருவாக்கப்படும்.

* சமஸ்கிருத துறைகள் மூலமாக சமஸ்கிருதம் பற்றியும் சமஸ்கிருத அறிவு முறைகள் (Sanskrit Knowledge System) பற்றியும் மிகச் சிறந்த இடைநிலை (Inter Disciplinary) ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

* உயர்கல்வித் துறையில் முழுமையான பல்துறை (Holistic Multidisciplinary) பயிற்று மொழியாக சமஸ்கிருதம் விளங்கும். நாடு முழுவதும் அதிக எண்ணிக்கையில் உள்ள சமஸ்கிருத ஆசிரியர்கள் பாடப் புலமை பெற்றவர்களாக (Professionalized) ஆக்கப்படுவார்கள்.

- இப்படி இந்து - சமஸ்கிருத திணிப்பாக உருவாக்கப்பட்டது தான் புதிய கல்விக் கொள்கை ஆகும். **மோடியின் தமிழ்ப்பாசம் எங்கே போனது?**

ஆங்கிலத்தை அகற்றி விட்டு அந்த இடத்தில் இந்தியை உட்கார வைப்பதும், இந்தியை உட்கார வைத்த இடத்தில் சமஸ்கிருதத்தை உட்கார வைப்பதும்தான் அவர்களது நோக்கம்.

**இவ்வளவு தமிழ்ப் பாசம் இருக்கும் பிரதமர் மோடி, தமிழ் மொழியை இந்திய அரசின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஏற்பாரா? மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் இந்திய அரசின் ஆட்சிமொழியாக ஆக்குவாரா? தமிழகத்தில் இயங்கும் ஒன்றிய அரசின் அலுவலகங்களில் இணை அலுவல் மொழியாக தமிழை அங்கீகரித்து, அனைத்து அலுவலகச் செயல்பாடுகளும் தமிழிலேயே இயங்க உரிய சட்டத் திருத்தம் செய்ய முன் வருவாரா? சென்னை உயர்நீதி மன்ற வழக்காடு மொழியாக தமிழை ஆக்க முயற்சிப்பாரா? இதையெல்லாம் செய்து விட்டு தமிழைப் பற்றி பேசவும். தமிழை ஏமாற்ற வேண்டாம்.**



மக்களவைத் தேர்தலில் கழகத்தின் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியின் சார்பில், தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, நாலாட்டின்புதூர், முடுக்குமீண்டான்பட்டி, தோனுகால், வானரமுட்டி, குமரெட்டியாபுரம், காலாம்பட்டி, கட்டாலங்குளம் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட பகுதிகளில் மக்களைச் சந்தித்து வாக்குச் சேகரித்தார். உடன் அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பெ.கீதா ஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி, நகர மன்றத் தலைவர் கருணாநிதி, கோவில்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ராதாகிருஷ்ணன், பீக்கிளிப்பட்டி முருகேசன், பொதுக் குழு உறுப்பினர் ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### தமிழர்களை கொச்சைப்படுத்தும் பா.ஜ.க.வை விரட்டியடிக்க வேண்டும்!

# தேர்தல் முடிந்ததும் மோடியைத்தான் ஆதரிப்பார் எடப்பாடி!

## கோவில்பட்டியில் கனிமொழி கருணாநிதி பேச்சு!

கோவில்பட்டி, ஏப். 2-

தமிழர்களை கொச்சைப் படுத்தும் பா.ஜ.க.வை விரட்டியடிக்க வேண்டும். தேர்தல் முடிந்ததும் மோடியைதான் ஆதரிப்பார் எடப்பாடி பழனிச்சாமி என கோவில்பட்டியில் வாக்குச் சேகரித்த போது பேசிய கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டார்.

தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி மக்களவைத் தொகுதிக்கான கழக வேட்பாளருமான கனிமொழி கருணாநிதி மார்ச் 31 ஆம் தேதியன்று மாலை கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட லிங்கம்பட்டி, தாமஸ் நகர் மணிக்கூண்டு, சண்முக நகர் பஸ் ஸ்டாப் கடலையூர் ரோடு, வடக்கு திட்டங்குளம், முத்துநகர், சண்முக சிகாமணி நகர்பசுவந்தனை ரோடு, மந்திதோப்பு, ஊத்துப்பட்டி, இடைச்செவல், இனாம் மணியாச்சி உள்ளிட்ட பகுதிகளில் பயணம் மேற்கொண்டு உதய சூரியன் சின்னத்தில் தனக்கு வாக்களிக்குமாறு ஆதரவு திரட்டினார்.

அப்போது கனிமொழி கருணாநிதி பேசியதாவது:-

ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் கொண்டுவருவதன் மூலமாகத்தான் சமூக மாற்றத்தை கொண்டு வர முடியும். ஏனென்றால் பா.ஜ.க. இருநூறு வருடங்கள் முன்பு இருந்த நிலைமைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கிறது.

**கல்விக் கடனை தள்ளுபடி செய்யாத பா.ஜ.க. அரசு!**

நீட் தேர்வு மூலமும், புதிய கல்விக் கொள்கை மூலமும் நம் வீட்டுப் பிள்ளைகள் மருத்துவப் படிப்பு மட்டுமல்ல, பட்டப்படிப்பு கூட படிக்க முடியாமல் போகும் நிலையை உருவாக்க முயல்கிறது பா.ஜ.க.

விவசாயிகள் அடிப்படை ஆதார விலை நிர்ணயிக்க வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் செய்ய பா.ஜ.க. அரசு தயாராக இல்லை. விவசாயிகள் கடனை தள்ளுபடி செய்ய, கல்விக் கடனை தள்ளுபடி செய்ய பா.ஜ.க. தயாராக இல்லை.

**100 நாள் வேலை நாட்கள் அதிகரிக்கப்படும்!**

மோடி ஆட்சியில் 100 நாள் வேலை திட்டத்துக்கு நிதி ஒதுக்குவதை குறைச்சுக்கிட்டே வருகிறார்கள். திமுக - காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட நல்ல திட்டம் அது. அதனாலேயே மோடி இதை முடக்கி வைத்திருக்கிறார். ஒன்றியத்தில் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் 100 நாள் வேலை 150 நாட்களாக அதிகரிக்கப்படும். அதுமட்டுமல்ல நூறு நாள் வேலையின் சம்பளம் 400 ஆக அதிகரிக்கப்படும். இதை தி.மு.க. மட்டுமல்ல, காங்கிரஸும் கூறியிருக்கிறது.

விவசாயிகளுக்கு எதிரான சட்டம், சிறுபான்மை மக்களுக்கு எதிரான சி.ஏ.ஏ., தொழிலாளர்களுக்கு எதிரான சட்டம் - இவை எல்லாவற்றுக்கும் ஆதரவாக கையெழுத்து போட்டவர்கள்தான் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க.வினர். ஆனால் இப்போது பா.ஜ.க.வை எதிர்ப்பது போல எடப்பாடி நடிக்கிறார்.

இதுவரை பிரதமர் மோடியை எதிர்த்து ஒரு கேள்வி கேட்டிருக்கிறாரா எடப்பாடி பழனிசாமி? அவரது கட்சியின் தலைவர்களை திட்டும்போது கூட பேசாமல் இருக்கிறார். நாம் சொல்கிறோம், 'இந்தியா' கூட்டணி சார்பாக ஒருவர் பிரதமராக வருவார் என்று சொல்கிறோம். எடப்பாடி தேர்தல் முடிந்ததும் மீண்டும் மோடிதான் பிரதமர் என்று சொல்லுவார். எனவே அவர்கள் இருவரும் ஒன்றுதான். இருவரையும் அப்புறப்படுத்த வேண்டும்.

கேஸ் சிலிண்டர் விலை இப்போது 1100 ரூபாய். நமது இந்தியா கூட்டணி ஆட்சி வந்தவுடன் 500 ரூபாயாக குறைக்கப்படும். பெட்ரோல் 75, டீசல் 65 ரூபாயாக குறைக்கப்படும். விவசாய கடன் ரத்து செய்யப்படும். விவசாயிகளின் விளை பொருட்களுக்கு அடிப்படை ஆதார விலை நிர்ணயிக்கப்படும்.

வெளியூர் போனால் டோல் கேட் வைத்து காசு பிடுங்குகிறார்கள் அல்லவா. இந்தியா கூட்டணி ஆட்சியில் டோல் கேட்டுகள் எல்லாம் மூடப்படும்.

2019 இல் நான் தூத்துக்குடியில் நின்றபோது, 'கனிமொழி ஜெயித்தால் சென்னையிலதான் இருப்பார்' என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு இரண்டாம் தாய் வீடே இந்தத் தூத்துக்குடிதான்.



இந்த தேர்தல் டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனை செய்யக் கூடிய பா.ஜ.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய தேர்தல். நாம் நமது வரியாக ஒரு ரூபாய் கொடுத்தால் நமக்கு 25 அல்லது 26 பைசாதான் கொடுக்கிறார்கள். மேலும் தமிழர்களை கேவலப் படுத்தும் வகையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் ஒரு கோடியே 16 லட்சம் பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்கி வருகிறார் முதலமைச்சர் அண்ணன். ஆனால் அந்த உரிமைத் தொகையை பிச்சை என்று கேவலமாக பேசுகிறார்கள் பா.ஜ.க.வினர்.

இங்கே இருக்கிற சகோதரிகளுக்கு பிச்சை வாங்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால்தான் அதற்கு முதலமைச்சர் உரிமைத் தொகை என்று கௌரவமாக பெயரிட்டார். அதேபோல மழை வெள்ள நிவாரணம் கேட்டால் அதையும் பிச்சை என்கிறார்கள்.

**பாடம் கற்பிப்போம்!**

இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம் என்பது தமிழர்களின் இரத்தத்தில் கலந்தது. ஆனால் அதைப் பார்த்து அண்ணாமலை, 'பிஞ்சு போன செருப்புதான்' இந்தி எதிர்ப்பு போராட்டம் என்று சொல்கிறார். எவ்வளவு திமிர் இருந்தால் இப்படியெல்லாம் கொச்சைப்படுத்துவார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு இந்தத் தேர்தல் மூலமாக நாம் பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

அதற்கு 'இந்தியா' கூட்டணி ஒன்றியத்தில் ஆட்சிக்கு வர வேண்டும். உங்களுக்காக மீண்டும் பணியாற்றிட எனக்கு நமது முதல்வரின் சின்னமான உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்ய வேண்டுகிறேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு தான் செய்து தந்த குடி நீர் திட்டங்கள், சமூக நலக் கூடங்கள், சாலை பணிகள் உள்ளிட்ட வற்றை கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி பெருமிதமாக பட்டியலிட்டு காட்டினார்.

